**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 04ம் நாள்** - வியாழக்**கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 21-ம் நாள்

**கு.ப.ம.எண்.435/2026**

ஜிலாக்கி (எ) மாரியப்பன், வயது 36/2026, த/பெ. முருகன் ..... மனுதாரர்/ எதிரி

-எதிர்-

காவல் ஆய்வாளர், வெளிப்பாளையம் காவல் நிலையம்.

குற்ற எண்.144/2026 ...... எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (04.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்தரப்பு வழக்குரைஞர் திரு. பி. ஆர். நடேச ஜெயராமன் மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர். செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**//உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 144/2026ன் கீழ், தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டம் பிரிவுகள் 4(1)(C), r/w 4(1-A)ன் கீழான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவரால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் நிரபராதி என்றும், மனுதாரர் மீது பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 21.05.2026 அன்று கைது செய்யப்பட்டு 15 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார் என்றும், இது முதல் பிணை மனு என்றும், எனவே மனுதாரருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி 180 மிலி, கொள்ளளவு கொண்ட 100 பாண்டி சாராய பாட்டில்களை வைத்திருந்துள்ளார் என்றும், எதிரி மீது சுமார் 45 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரரை பிணையில் விட்டால், மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடுவார் என்றும் வாதிட்டு, மனுதாரருக்கு ஜாமீன் வழங்க கடுமையாக ஆட்சேபனை தெரிவித்தார்.

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் மீது தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டம் பிரிவுகள் 4(1)(C), r/w 4(1-A)ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் எவ்வித அரசு அனுமதியோ அல்லது அரசு உரிமமோ இல்லாமல் விஷ நெடியுடன் கூடிய 180 மிலி, கொள்ளளவு கொண்ட 100 பாண்டி சாராய பாட்டில்களை

வைத்திருந்த குற்றச்செயல் வாயிலாக 21.05.2026 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். எதிரி மீது சுமார் 45 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்நிலையில் எதிரியை பிணையில்விட்டால் தொடர்ந்து இதுபோன்ற குற்றச்செயல்களில் மீண்டும் ஈடுபடுவார், விஷச் சாராய விற்பனை மற்றும் நுகர்வு பொதுமக்களுக்கு மிக மோசமான உடல்நலக் குறைபாடுகளை ஏற்படுத்தும். இத்தகைய செயல்கள் சமூகச் சீர்கேடுகளுக்கு வழிவகுக்கும். எனவே மேற்படி வழக்கின் தீவிரத்தையும், பொதுமக்களின் நலனையும் கருத்தில் கொண்டு இம்மனுவை **தள்ளுபடி** செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவில், இம்மனு **தள்ளுபடி** செய்யப்படுகிறது.

இன்று (04.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- ஜி.எம். வசந்தி,
மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. நீதித்துறை நடுவர் எண்.2, நாகப்பட்டினம்.
2. காவல் ஆய்வாளர், வெளிப்பாளையம் காவல் நிலையம்.
3. திரு. பி. ஆர். நடேச ஜெயராமன், வழக்கறிஞர், நாகப்பட்டினம்.